வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 23.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மக்களவைக்கு 6-ஆம் கட்டமாக வரும் 25-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைந்தது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் இன்று புத்தபூர்ணிமா கொண்டாடப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலத்தில் திரிணமுல் காங்கிரஸ் திருப்திபடுத்தும் அரசியலில் ஈடுபட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

தெற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை மறுநாள் புயலாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மக்களவைத் தேர்தல்*

மக்களவைக்கு 6-ஆம் கட்டமாக வரும் 25-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் ஓய்வடைந்தது. பீகாரில் 8 தொகுதிகள், அரியானாவில் 10, ஜார்கண்டில் 4, ஒடிசாவில் 6, உத்தரபிரசேத்தில் 14, மேற்குவங்கத்தில் 8, டெல்லியில் 7, ஜம்மு-காஷ்மீரில் 1 என 6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. இந்த தொகுதிகளில் அனைத்து கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இன்று இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். ஆம் ஆத்மி தலைவர்களுள் ஒருவரும் பஞ்சாப் மாநில முதலமைச்சருமான திரு பகவந்த் சிங் மான் மற்றும் காங்கிரஸ், சிரோன்மணி அகாளிதளம், பகுஜன் சமாஜ், ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ் இன்று பீகார் மாநிலத்தின் வைஷாலி கோபால்கஞ்ச் உள்ளிட்ட இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார். பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் செல்வி மாயாவதி பீகார் மாநிலத்தின் பக்சர் தொகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அரியானா மாநிலம் மகேந்திரகர்க்கில் இன்று

நடைபெற்ற தேர்தல் பேரணியில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி இண்டியா கூட்டணி ஏற்கனவே நடைபெற்ற 5 கட்ட தேர்தல்களிலும் தோல்வி அடைந்துள்ளது என்றும், இதன் காரணமாக தேர்தல் ஆணையத்தின் தரவு மற்றும் மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் குறித்து கேள்வி கேட்பது போன்ற பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறி வருவதாகவும் தெரிவித்தார். காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, நேற்று இதே தொகுதியில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அக்னிவீர் திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் இந்திய ராணுவத்தை பிஜேபி அவமதித்து இருப்பதாக தெரிவித்தார். இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அக்னிவீர் திட்டம் ரத்து செய்யப்படும் என்றும் கூறினார். ஒடிசாவில் 6 மக்களவைத் தொகுதிகளுடன் சேர்த்து 3-ஆம் கட்டமாக 42 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் நாளை மறுநாள் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. புதுடெல்லி மங்கோல்புரியில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி இன்று தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். மேலும் பிஜேபியின் மூத்த தலைவர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு பியூஷ்கோயல் உள்ளிட்டோரும், ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் தேர்தல் பரப்புரை மேற்கொண்டனர். இதற்கிடையே, 6-ஆம் கட்ட மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில்

தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது. வாக்குச் சாவடியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே, மக்களவைக்கு 7-ஆவது மற்றும் இறுதி கட்ட தேர்தல் ஜுன் 1-ஆம் தேதி நடைபெற உள்ளதை ஒட்டி, அங்கு பிரச்சாரம் விறுவிறுப்பு அடைந்துள்ளது. 7 கட்டங்களாக நடைபெறும் மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் ஜுன் 4-ஆம் தேதி எண்ணப்படுகின்றன. அன்றைய தினமே ஒடிசா, ஆந்திரபிரதேச மாநிலங்களில் நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கையம் நடைபெறுகிறது. மேலும் அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநில சட்டப் பேரவை தேர்தல்களில் பதிவான வாக்குகள் ஜுன் 2-ஆம் தேதி எண்ணப்பட உள்ளன.

*புத்தபூர்ணிமா*

புத்தரின் 2568-ஆம் ஆண்டு பிறந்த தினம் புத்த பூர்ணிமாவாக இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு. குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களும் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இத்தினத்தை முன்னிட்டு புத்தர் அவதரித்த பீகார் மாநிலம் புத்த கயாவில் உள்ள மகா போதி ஆலயத்தில் உலக அமைதி வேண்டி சிறப்பு பிராத்தனைகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும்

ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. புத்த பிட்சுகள் மற்றும் அவரது போதனையை பின்பற்றும் பக்தர்கள் புத்த கயாவில் குவிந்துள்ளனர். அண்டை நாடுகளான தாய்லாந்து, மியான்மர், ஜப்பான், இலங்கை, மற்றும் இந்தோனேஷியாவில் இருந்தும் புத்த துறவிகள் அங்கு நடைபெறும் பிராத்தனையில் பங்கேற்றுள்ளனர்.

மோடி

2010-ஆம் ஆண்டு முதல் மேற்குவங்க மாநிலத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஓபிசி சான்றிதழ்களையும் கல்கத்தா உயர்நீதிமன்றம் ரத்து செய்ததை அடுத்து அம்மாநிலத்தில் மம்தா பேனர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் திருப்திபடுத்தும் அரசியலில் ஈடுபட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பேனர்ஜி அரசியலைப்பு மற்றும் சட்டப்பூர்வமான நிர்வாகத்தை விட அரசியல் ஆதாயங்களுக்கே முன்னுரிமை அளிப்பதாகவும் தெரிவித்துள்ள பிரதமர் வாக்கு வங்கிக்காக அனைத்து வரம்புகளையும் மீறி திருப்திப்படுத்தும் அரசியலில் ஈடுபட்டு வரும் கட்சிகளுக்கு ஒரு பெரிய அடியாக கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் உத்தரவு அமைந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். தனது வாக்கு வங்கி அரசியலுக்கான பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை மம்தா பேனர்ஜி கொள்ளையடிக்க நினைப்பதாக மத்திய உள்துறை

அமைச்சரும் பிஜேபி மூத்த தலைவருமான திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். மதத்தின் அடிப்படையிலான இடஒதுக்கீட்டை பிஜேபி கடுமையாக எதிர்கிறது என்றும் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அமல்படுத்தப்படுவதை பிஜேபி உறுதி செய்யும் என்றும் அவர் மேலும் கூறி உள்ளார். 2010-ஆம் ஆண்டு முதல் மேற்குவங்கத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஓபிசி சான்றிதழ்களையும் நேற்று ரத்து செய்து உத்தரவிட்ட கொல்கத்தா உயர்நீதிமன்றம் 2010-ஆம் ஆண்டுக்குப் பிறகு அம்மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட ஓபிசி பட்டியல் சட்டவிரோதமானது என்றும் தெரிவித்துள்ளது.

*கெஜரிவால்*

தற்பொழுது நடைபெறும் லோக்சபா தேர்தலில் நரேந்திர மோடியின் அலை இல்லை என்றும், சாமானிய மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் உள்ளூர் பிரச்சனைகளே முக்கியத்துவம் பெற்றுள்ளதாகவும் ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதலமைச்சருமான திரு அரவிந்த் கெஜிவால் தெரிவித்துள்ளார். ஹிந்தி நாளிதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் வேலையின்மையும் பணவீக்கமும் மக்களை அதிகமாக பாதிக்கிறது என்றும் எதிர் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கு எதிராக மத்திய அமைப்புகளை பிஜேபி தவறாக பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். இடஒதுக்கீட்டை ரத்து செய்ய பிஜேபி முயற்சி

செய்வதாகவும் தெரிவித்தார். மொஹல்லா கிளினிக், இலவச மின்சாரம் மற்றும் அரசுப் பள்ளிகளின் மேம்பாடு உள்ளிட்ட தனது அரசின் முயற்சிகளை திரு அரவிந்த கெஜரிவால் பட்டியலிட்டார். இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தமது கட்சி அளித்த உத்தரவாதங்கள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேளாண்துறை

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியில் வேளாண் துறை தன்னிறைவை எட்டி உள்ளதாக, தமிழக அரசு தெரிவித்துள்ளது. நாட்டிலேயே முன்னணி மாநிலமாக திகழ்வதோடு, அண்டை மாநிலங்களுக்கும் உணவு பொருட்களை வழங்கி வருவதாக அரசு இன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் கடந்த 2022-ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து 4 மணி நேரத்தில் 6 லட்சத்து 3 ஆயிரம் மரக் கன்றுகளை நட்டதற்காக எலைட் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது குறித்தும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருச்சி, திருநெல்வேலி, நாகை, ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 13 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று வளாகம் ஏற்படுத்தப் பட்டுள்ளதையும் தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வானிலை

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டி உள்ள தெற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை காலை மத்திய வங்க கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று வரும் 25-ஆம் தேதி புயலாக வலுப் பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயல் வடக்கு திசையில் நகர்ந்து தீவிரப் புயலாக வலுப்பெற்று வங்கதேசம் மற்றும் அதனை ஒட்டி உள்ள மேற்குவங்க கடற்கரையை நோக்கி நகரக் கூடும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக அடுத்த 2 நாட்களுக்கு தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, கோயம்புத்துர் மற்றும் நீலகிரி மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் கன முதல் மிககனமழை பெய்யக் கூடும் என்றும்  வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 25-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒருசில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.  வரும் 27-ஆம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அதிகபட்ச வெப்பநிலை பொதுவாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக் கூடும் என்றும்

வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று தமிழ்நாட்டில் அதிகபட்ச வெப்பநிலையாக ஈரோட்டில் 37.6 டிகிரி செல்சியஸ் பதிவாகி உள்ளது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையாக 33 டிகிரி செல்சியஸ் பதிவாகி உள்ளது.

தொடர் மழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன. நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையில் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால், சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க தற்காலிக தடை விதிக்கப் பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் கடலூர் மாவட்டம் வேப்பூரில் 20 சென்டிமீட்டர் மழையும், விழுப்புரத்தில் 17 சென்டிமீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

கிரிக்கெட் (5)

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் நாளை சென்னையில் நடைபெறும் 2-ஆவது தகுதி சுற்று ஆட்டத்தில் ராஜஸ்தான் மற்றும் ஐதராபாத் அணிகள் விளையாடுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா அணியை எதிர்கொள்ளும்.

படகு விபத்து

மகாராஷ்டிர மாநிலம் சோலாபூர் மாவட்டத்தில் உள்ள உஜ்ஜானி நீர் தேக்கத்தில் படகு கவிழ்ந்த விபத்தில் பலியான 6 பேரின் உடல்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர் இன்று மீட்டுள்ளனர். இறந்தவர்களில் 3 ஆண்கள், ஒரு பெண் மற்றும் 2 குழந்தைகள் அடங்குவர். கடந்த செவ்வாய்கிழமை இந்த விபத்து நடந்த போது படகில் பயணம் செய்த ஒருவர் நீந்தி கரை சேர்ந்தார். காணாமல் போன 6 பேரை கடந்த 2 நாட்களாக தேசிய பேரிடர் மீட்பு படையினர் நீர்த் தேக்கத்தில் தீவிரமாக தேடி வந்தனர். மற்றொரு சம்பவத்தில் மகாராஷ்டிர மாநிலம் அகமத் நகர் மாவட்டத்தில் உள்ள பிரவரா ஆற்றில் மூழ்கிய 2 குழந்தைகளை தேடும் பணியின் போது படகு கவிழ்ந்த விபத்தில் மாநில பேரிடர் மீட்பு படையைச் சேர்ந்த 3 பேர் உயிர் இழந்தனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மக்களவைக்கு 6-ஆம் கட்டமாக வரும் 25-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைந்தது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் இன்று புத்தபூர்ணிமா கொண்டாடப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலத்தில் திரிணமுல் காங்கிரஸ் திருப்திபடுத்தும் அரசியலில் ஈடுபட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

தெற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை மறுநாள் புயலாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

---------------------